**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 698//2022 PW . 2**

Name : சண்முகம் Fathers Name : முத்து

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.2024

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**
**----------------------------------------------------------------------------------------------------**

**முதல் விசாரணை:**

நான் திருமயத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். 21.7.2017 அன்று காலை 10.30 மணியளவில் எனது அண்ணன் மகன் அகிலன் அவருக்கு சொந்தமான பல்சர் இருசக்கர வாகனத்தில் திருமயத்தில் இருந்து கிளம்பி கானாடுகாத்தானுக்கு செல்வதற்காக சென்றபோது டாடா ஏஸ் பால் வாகனம் ஒன்று குறுக்கு சாலையில் வந்து அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. இதுகுறித்து முருகானந்தம் எனது சித்தப்பா மகன் எனக்கு தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு நான் சென்று பார்த்தேன். எனது அண்ணன் மகன் அகிலனுக்கு சுவற்றில் மோதி பின்னந்தலையில் காயம் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக சொன்னார். விபத்து சமயத்தில் இருந்தவர்களிடம் கேட்டபோது சம்பவ சாலையில் டாட்டா ஏஸ் வாகனம் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து அகிலன் மீது மோதியதால் விபத்து நடந்ததாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை:

போலீசார் எங்கு எப்போது விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அகிலன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. டாடா ஏஸ் வாகனத்தின் பதிவு எண் டிஎன் 63 3360 ஆகும். இடையில் உள்ள எண் தெரியாது. எந்த நிறுவனத்தின் பால் வண்டி என தெரியாது. சம்பவ நடந்ததாக சொல்லும் இடம் கானாடுகாத்தான் ஆகும். அதன் தெரு பெயர் மற்றும் விபரம் தெரியாது. டாடா ஏஸ் வாகனம் எவ்வாறு வந்தது என எனக்கு தெரிவித்த நபர் யார் என்று தெரியாது. விபத்து சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது.

மறு விசாரணை: இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 698//2022 PW . 3**

Name : பாலமுருகன் Fathers Name : அடைக்கலம்

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.2024

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

---

**முதல் விசாரணை:**

நான் திருமயத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். 21.7.2017 அன்று காலை 10.30 மணியளவில் எனது சித்தப்பா மகன் அகிலன் அவருக்கு சொந்தமான பல்சர் இருசக்கர வாகனத்தில் திருமயத்தில் இருந்து கிளம்பி நேமத்தான்பட்டிக்கு நண்பர் வீட்டிற்கு சென்றபோது டாடா ஏஸ் பால் வாகனம் ஒன்று குறுக்கு சாலையில் வந்து அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. இதுகுறித்து பாண்டியன் எனது சித்தப்பா எனக்கு தகவல் சொன்னார். நான் கேள்விப்பட்டு கானாடுகாத்தான் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அகிலனுக்கு இந்த விபத்தில் பின்னந்தலையில் காயம் ஏற்பட்டு இறந்து விட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

மறு விசாரணை: இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 698//2022 PW . 4**

Name : மாணிக்கம் Fathers Name : மாரியப்பன்

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.2024

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

---

**முதல் விசாரணை:**

**நானும் எனது நண்பர் கணேசன் என்பவரும் நேமத்தான்பட்டி வழியாக சென்றபோது போலீசார் கூட்டமாக நின்று விசாரித்து கொண்டிருந்தார்கள். எங்களை அழைத்து அங்கு நடந்த விபத்து சம்பந்தமாக விசாரித்து கையெழுத்து கேட்டார்கள். நானும் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அது அதசாஆ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**குறுக்கு விசாரணை:**

**கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற முழுவிபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த காவல்நிலையத்தில் தங்களிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றால் செட்டிநாடு காவல்நிலையம். கையெழுத்தை சம்பவ இடத்தில் போடவில்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதால் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை: இல்லை**